செ.வெ.எண். 797 நாள் 18.09.2010

# அரசு செய்திக்குறிப்பு

# தமிழகத்தில் பன்றிக்காய்ச்சல் நோய்த்தடுப்புக்கான தீவிர தடுப்பு நடவடிக்கைகள்

## மாவட்ட இணை இயக்குநர்கள் / துணை இயக்குநர்கள் ஆய்வுக்கூட்டம் நாள் – **18–9–2010**

---

சென்னை எழும்பூர் குடும்பநல பயிற்சி நிலையத்தில் **18–9–2010** அன்று பன்றிக்காய்ச்சல் நோய்த்தடுப்பு தொடர்பான தீவிர தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இணை இயக்குநர்கள் துணை இயக்குநர்கள் ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திருமிகு.எம்.ஆர்கே.பன்னீர் செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மக்கள் நல்வாழ்வுத்துறை செயலர் திரு.வி.கு.சுப்புராஜ், பொது சுகாதாரத்துறை இயக்குநர் மருத்துவர்.இரா.தி.பொற்கைப்பாண்டியன் ஆகியோர் ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

தமிழகத்தில் பன்றிக்காய்ச்சல் நோய் பரவுதலை முற்றிலும் தடுக்க பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு கீழ்க்கண்ட நாட்களில் மாவட்ட மாநில அலுவலர்களுக்கு ஆய்வுக்கூட்டங்கள் மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு;-

| நாள் | ஆய்வுக்கூட்ட தலைமை | ஆய்வுக்கூட்டம் நடைபெற்ற இடங்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் |
|---|---|---|
| 15.6.2010 | எல்லையோர மாவட்டங்களில் பன்றிக்காய்ச்சல் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கான ஆய்வுக்கூட்டம் | கோயம்புத்தூர் – எல்லையோர மாவட்ட துணை/ இணை இயக்குநர்கள் |
| 18.6,2010 | சென்னையில் மாண்புமிகு அமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் | சென்னை. மாவட்ட அலுவலர்கள் |
| 29.6,2010 | சென்னையில் மாண்புமிகு அமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் | சென்னை, மருத்துவத்துறை, மருத்துவகல்வித்துறை |
| 4.9.2010 | சென்னையில் மாண்புமிகு அமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் | சென்னை, மருத்துவத்துறை, சென்னை மாநகர மேயர் பங்கேற்றார். |
| 10.9.2010 | சென்னையில் பொது சுகாதாரத்துறை இயக்குநர் அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் | சென்னை, மாநகராட்சி, கிங்நிலையம் , துணை இயக்குநர்கள் |
| 17.9.2010 | சென்னையில் மாண்புமிகு அமைச்சர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் | சென்னை/ மருத்துவக்கல்வி, மருத்துவத்துறை, மாநகராட்சி, மற்றும் மருத்துவக்கல்லூரி டீன்கள்., கிங் நிலையம் |

மேலும், மாதந்தோறும் நடைபெறும் துணை இயக்குநர் ஆய்வுக்கூட்டங்களிலும் இந்நோய் தடுப்பிற்கான அறிவுரைகள் மாவட்ட அலுலவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தற்போது, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பன்றிக்காய்ச்சல் நோய் பாதிப்பு இல்லை. குறிப்பாக சென்னை, திருவள்ளூர், கோவை, சேலம், வேலூா், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சிலருக்கு மட்டுமே இந்நோயின் தாக்கம் உள்ளது. **17.9.2010** நிலவரப்படி மாநிலத்தில் **774** பேருக்கு இந்நோயின் அறிகுறிகள் உள்ளது. இதுவரை இந்நோயால் 19 பேர் இறந்துள்ளனர்.

பொது மக்களுக்கு இந்நோய் குறித்து மாவட்ட அளவில் பரந்த அளவிலான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

அனைத்து ஊரகப்பகுதிகளில் பணிபுரியும் தனியார் மருத்துவர்களுக்கு இதுகுறித்து விழிப்புணர்வு பயிற்சி முகாம் கடந்த ஒருவாரமாக நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் பன்றிக்காய்ச்சல் தடுப்புக்கென ஒரு முதுநிலை மருத்துவரை சிறப்புபணியாக அமைக்க வேண்டும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

- முதற்கட்டமாக சிகிச்சை அளிக்கும் பணிகளில் ஈடுபடும் **19,930** பொது சுகாதாரத்துறை பணியாளர்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

- இரண்டாவது கட்டமாக, 17.09.2010 வரை 18,854 மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு தடுப்புசிகள் போடப்பட்டுள்ளன.
- மக்கள் தாமாகவே முன்வந்து கிங்நிலையத்தில் தடுப்பூசி போட்டுக்கொள்கின்றனர். இதுவரை 3045 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- இந்த தடுப்பூசி திட்டத்தை வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக அளிக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

18/9

18/9/10

இயக்குநர், பொது சுகாதாரம்,
சென்னை-6.